**<u>முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பொள்ளாச்சி</u>**

<u>முன்னிலை : திருமதி.G.ஆனந்தி, எம்.ஏ., எம்.எல்.,</u>

<u>முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி, பொள்ளாச்சி.</u>

<u>2022ம் வருடம் ஜீன் திங்கள் 23ம் நாள் வியாழக்கிழமை</u>

**<u>அ.வ.எண்.133/2021 இல் இ.ம.எண்.02/2021</u>**

1. கோயமுத்தூர், பொள்ளாச்சி தாலூக்கா, கோமங்கலம் புதுார் அஞ்சல், கோமங்கலம், கதவு எண்.2/21A என்கிற விலாசத்தில் வசித்து வரும் திரு.செந்தில்குமார் மனைவி சுமார் 44 வயதுள்ள திருமதி.கவிதா.

2. கோயமுத்தூர், பொள்ளாச்சி தாலூக்கா, கோமங்கலம் புதுார் அஞ்சல், கதவு எண்.4/40A என்கிற விலாசத்தில் வசித்து வரும் திரு.சின்னச்சாமி மனைவி சுமார் 47 வயதுள்ள திருமதி.லலிதாமணி.

... மனுதாரர்கள் / வாதிகள்

/ எதிர் /

1. கோயமுத்தூர், பொள்ளாச்சி தாலூக்கா, கோமங்கலம் புதுார் அஞ்சல், கதவு எண்.5/39 என்கிற விலாசத்தில் வசித்து வரும் திரு.கிருஷ்ணசாமி மனைவி சுமார் 65 வயதுள்ள திருமதி.சகுந்தலா.

2. கோயமுத்தூர், பொள்ளாச்சி தாலூக்கா, கோமங்கலம் புதுார் அஞ்சல், மேற்கு தோட்டம், கதவு எண்.5/33 என்கிற விலாசத்தில் வசித்து வரும் திரு.ரங்கசாமி மகன் சுமார் 52 வயதுள்ள திரு.செல்வராஜ்.

3. கோயமுத்தூர், பொள்ளாச்சி தாலூக்கா, கோமங்கலம் புதுார் அஞ்சல், மேற்கு தோட்டம், கதவு எண்.5/33 என்கிற விலாசத்தில் வசித்து வரும் திரு.செல்வராஜ் மனைவி சுமார் 50 வயதுள்ள திருமதி.பத்மாவதி.

4. கோயமுத்தூர், பொள்ளாச்சி தாலூக்கா, கோமங்கலம் புதுார் அஞ்சல், கதவு எண்.4/102A என்கிற விலாசத்தில் வசித்து வரும் லேட்.சந்திர சேகர் மனைவி சுமார் 55 வயதுள்ள திருமதி.பங்கஜம்.

... எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகள்

தாவா வண்டித்தடத்தின் மீதான மனுதாரர்கள் / வாதிகளின் அனுபவ உரிமையையும், மேற்படி வண்டித்தடத்தில் மனுதாரர்கள் / வாதிகள் விவசாய விளைபொருட்களையும், உரங்களையும் எடுத்து செல்வதையும் எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகளோ அவரது ஆட்கள் வகையறாக்களோ எவ்வித இடைஞ்சலும் செய்யக்கூடாது என்று தற்காலிக உறுத்துக்கட்டளை உத்தரவும், அசல் வழக்கு முடியும் வரை இடைக்கால உறுத்துக்கட்டளை உத்தரவும் பிறப்பிக்கக்கோரி உரிமையியல் நடைமுறைச்சட்டம் கட்டளை 39 விதி 1 மற்றும் 2-ன் கீழ் இம்மனுவானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

மனு தாக்கல் நாள் : 27.04.2021

இம்மனுவானது கடந்த 27.04.2022ம் தேதியன்று இறுதி விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு மனுதாரர்கள் / வாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.S.சுரேஷ் அவர்கள் முன்னிலையாகியும், எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.S.சுந்தரராஜ் அவர்கள் முன்னிலையாகியும், மனுதாரர்கள் / வாதிகள் மற்றும் எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞர்களின் வாதுரைகளைக் கேட்டும், இதுநாள் வரையில் எனது கவனமான பரிசீலனையில் இருந்து வரும் வழக்காவணங்களை பரிசீலித்தும் இன்று இந்நீதிமன்றம் கீழ்க்கண்டவாறு வழங்கும்...

**<u>இறுதி உத்தரவு</u>**

| | |
|---|---|
| 1. | முடிவாக, இம்மனுவானது அனுமதிக்கப்பட்டு, தாவா வண்டித்தடத்தினை மனுதாரர்கள் / வாதிகள் பயன்படுத்துவதை அசல் வழக்கு முடிவடையும் வரை எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகள் எவ்வித இடையூறும் செய்யக்கூடாது என்று இடைக்கால உறுத்துக் கட்டளை பரிகாரம் வழங்கி உத்தரவிடப்படுகிறது. |
| 2. | செலவுத்தொகை இல்லை. |

**<u>சொத்து விபரம்</u>**

திருப்பூர் பதிவு மாவட்டம், கோமங்கலம் சார்பதிவு மாவட்டம், பொள்ளாச்சி வட்டம், கோமங்கலம்புதூர் கிராமம் புலத்தில் 254 காலைகளின் மேபுறத்தில் 13 அடி அகலத்தில் ரீ.ச.322/1 காலை வழியாக 4ம் பிரதிவாதியின் பூமி வரை வந்தடையும் வண்டித்தடத்தை வாதிகள் பயன்படுத்தும் வசதி உரிமையை விளம்புகை செய்ய்கோரியும் மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை கேட்டும் தாவா.

இவ்வுத்தரவு 2022ம் வருடம் ஜீன் மாதம் 23ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு இந்நீதிமன்ற முத்திரையும் இடப்பட்டது.

ஒப்பம்/–(G.ஆனந்தி)
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
பொள்ளாச்சி.

-----------------------------------

**இறுதி உத்தரவு**

அ.வ.எண்.133/2021

இல்

இ.ம.எண்.02/2021

நாள் : 23.06.2022

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,

பொள்ளாச்சி.

-----------------------------------